தனியாரால் தவளை, இறால் ஏற்றுமதி.

693 —[* வினா எண். 1582ல்— திரு. இரா. தாமரைக்கனி, மற்றும் திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தவளை, நண்டு, இறால், நத்தை ஆகியவற்றை தனியார் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தவளை, நண்டு, இறால், நத்தை ஆகியவற்றை தனியார் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிப்பதைப் பற்றி கொள்கையளவில் முடிவெடுப்பது மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். இதில், மாநில அரசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. இந்திய வனவிலங்கு சட்டத்தில் தவளை மற்றும் தவளை பொருள்களை மாநில அரசுகள் ஏற்றுமதி செய்வதற்கு குறிப்பாக தடை ஒன்றும் இல்லை. ஆயினும், நண்டு, மற்றும் தவளை இனங்கள் வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன் கீழ் அட்டவணை IVல் சேர்க்கப்பட்டிருப்பதால் இவ்வினங்களைப் பிடிப்பதற்கோ, விற்பதற்கோ மாநில தலைமை வனவிலங்கு பாதுகாவலரிடம் அனுமதி வாங்க வேண்டும். சுற்றுப்புற சூழ்நிலையை நிலைப் படுத்துவதில் தவளைகள் ஆற்றும் பணியைக் கருத்திலகொண்டு ஏற்றுமதி செய்வதற்காக வழங்கப்படும் தவளையின் அளவு படிப் படியாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சுற்றுப்புற சூழ்நிலையை நிலைப்படுத்துவது சம்பந்தமாக தவளைகள் பற்றி சொன்னார்கள். எவ்வாறு இந்த தவளைகள் சுற்றுப்புற சூழ்நிலையை நிலைப்படுத்துவதில் முக்கிய பணி எடுக்கிறது. அது மட்டுமல்லாமல் நமது நாட்டிலிருந்து தவளைக்கால்கள் ஏற்றுமதியாகின்றன. அதனால் அன்னியச் செலாவணி எவ்வளவு கிடைக்கிறது என்பதை அமைச்சர் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் பல்வேறு வகையான தவளைகள் உள்ளன. தண்ணீர் தவளைகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை மனிதர்கள் வாழும் இடங்களில் சுற்றியுள்ள சாணம், குப்பை, நிலங்களில் புழு பூச்சிகளையும், நெல் மற்றும் தென்னைக்குச் சேதம் விளைக்கும் புழு பூச்சிகளையும் உண்பதன் மூலம் மனித சமுதாயத்

திற்கு மிக்க நன்மையைச் செய்கின்றன. நீரில் உள்ள ஓட்டுல்லிணி வகைகளும், உயிரினங்களையும், தெளிந்த நீர் நிலை மீன்களையும், மலேரியா போன்ற தொத்து நோய் உண்டாக்கும் கிருமிகளை பரப்பும் கொசு முட்டைகளையும், லார்வாக்களையும் உண்பதன் மூலமாக தொத்து நோய்கள் மனிதனிடையே பரவாமல் தவளைகள் தடுக்கின்றன. தவளைக் கால்களைத் தனியார் துறை வியாபாரிகள் ஏற்றுமதி செய்வதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11 கோடி அன்னியச் செலாவணி நமக்கு கிடைக்கிறது. தவளைச் கால்கள், மருந்துக்கும், உணவிற்கும் அயல் நாடுகளில் பயன்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக கிடைக்கப்பெற்ற புள்ளிவிவரப்படி 3,000 டன்கள் தவளைக் கால்கள் ஏற்றுமதியாகி இருக்கின்றன. 9,000 டன்கள் அதாவது 200 மில்லியன் தவளைகள் நம்நாட்டில் பிடிக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்களுக்கும், நெல் மற்றும் தென்னை போன்ற பயிர்களுக்கும் சேதம் விளைவிக்கும் புழு பூச்சிகளை இந்தத் தவளைகள் உண்கின்றன என்று இந்தக் கேள்வியின் ஆரம்பத்தில் சொன்னேன். அன்னியச் செலாவணி 11 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்க்கின்ற குளங்கள் தனியாருக்கு விடப்படுகின்றனவா ? அப்படி விடப்படுகின்றன என்றால் அதிலே எவ்வளவு பரப்பளவு மீன் குளங்கள் விடப்படுகின்றன? அப்படிப்பட்ட குளங்களில் மீன்விட அவர்களுக்கு ஏதாவது கடன் உதவி வழங்கப்படுகிறதா. அப்படி வழங்கப்பட்டால் அதிலே உற்பத்தியாகின்ற மீன்கள் எவ்வளவு ? வேறு ஏதாவது பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றனவா ? தனியார்களுக்கு எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியை மனதிலே வைத்துக் கேட்கிறார் என்று கருதுகிறேன். இது தவளை, நண்டு தனியார் ஏற்றுமதி பற்றிய கேள்வியாகும்.

மீன் வளர் போர் மேம்பாட்டு நிறுவனம்

694.—(* வினா எண். 7061) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக மத்திய அரசு ஒதுக்கி உள்ள தொகை எவ்வளவு ?